சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :19.06.2025
வா.சா.1 – மகேந்திரன் S/o முத்துகிருஷ்ணன்
C.O.S No.1 /2024 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் வழக்கின் பிரதிவாதியோடு, தொழிலில் கூட்டுதாரராக இருந்தேனா என்றால் இல்லை. பிரதிவாதியுடைய தொழிலில் மூலதனம் கொடுத்திருப்பதாக கூறியுள்ளேனே தவிர எதற்காக தொழிலில் கூட்டுதாரராக செயல்படவில்லை என்றால் பிரதிவாதியும் கூட்டுதாரராக இருக்கும்படி கேட்கவில்லை, நானும் விரும்பவில்லை. பிரதிவாதியிடம் இருந்து பங்கு எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி பங்குகள் வெளியிடுவாரா என்றால் இல்லை. பிரதிவாதியுடைய நிறுவனம் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பிரதிவாதியின் நிறுவனத்தின் பெயர் ஓம் முருகா அசோசியேட்ஸ் என்ற பெயரில் கூட்டாண்மை செய்து வருகிறார். அது நிறுவனமா என்று எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி நடத்திவரும் ஸ்தாபனமானது, பங்குகள் விற்பனை செய்வது வழக்கமா என்றால் இல்லை. அரசு பிரதிவாதி நிறுவனத்திற்கு முதலீடுகள் வாங்குவதற்கு அனுமதி அளித்துள்ளதா என்றால் தெரியவில்லை. நான் காவல்துறையில் பணியாற்றி உள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்துறையில் இருந்து விருப்ப ஓய்வில் வந்துவிட்டேன். வா.சா.ஆ.1 முதலீட்டு ஒப்பந்த பத்திரமானது, எதிர்கால பண பரிவர்த்தனைக்காக எழுதப்பட்டுள்ளதே தவிர, பண பரிமாற்றம் செய்ததற்கான ரசீது கிடையாது என்றால் சரியல்ல. பணபரிமாற்றம் நடந்ததால் தான் ஒப்பந்தமே போடப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் 2வது தரப்பினராகவும், பிரதிவாதி முதல் தரப்பினராகவும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதலீட்டு ஒப்பந்த பத்திரத்தில் பிரதிவாதி நடத்தி வரும்

ஓம் முருகா அசோசியேட்ஸ் என்னும் இரண்டு சக்கர வாகன நிதி நிறுவனத்தில் முதலீட்டு தொகையாக ரூபாய் 3 லட்சம் நான் கொடுப்பதாகவும் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்தேன் என்றோ, அல்லது பிரதிவாதி என்னிடம் இருந்து பணம் பெற்றுகொண்டார் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த வாசகம் இல்லை, வேறு வாசகம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வா.சா.ஆ.2 காசோலையை கொடுத்ததாக வாசகம் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் தரப்பினரான எனக்கு தேவைப்படும் போது 1ம் தரப்பினரிடம் இருந்து 3 மாத காலம் அவகாசம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறான சூழ்நிலையில் டிசம்பர் 2017ம் ஆண்டில் இருந்து 30.11.2022 முடிய பணத்தை கேட்டு, பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் அவரிடம் நல்ல பேச்சுவார்த்தையில் இருந்ததால்சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை. உண்மையில் பணம் கொடுத்திருந்தால் சட்ட அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றும், அவ்வாறு பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வருட பங்குஆதாயம் ரூபாய் 72,000 என்று குறிப்பிட்டுள்ள சூழலில் Gpay மூலம் ரூபாய் 7000 மற்றும் 5000 பெற்று கொண்டதாக மட்டும் கூறுவது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி Gpay மூலம் கைமாற்று கடனாக தான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக காலாவதி தோஷத்தினால் பாதிக்கக்கூடாது என்பதற்காக தான் Gpay மூலம் பணம் கொடுத்த தேதியை வழக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. Gpayயில் பிரதிவாதி எனக்கு கொடுத்த பணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை

என்றால் சரியல்ல இருக்கிறது. நான் பிரதிவாதியிடம் பங்குதாரராக இல்லாத பட்சத்தில் என்னிடம் கணக்கு வழக்கு நிலவரம் பற்றி விளக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், அவ்வாறான சூழலில் பிரதிவாதி என்னிடம் கணக்கு வழக்கு சொல்லவில்லை என்ற காரணத்தினால் 13.03.2023 அன்று வேறு வழியின்றி பணம் கேட்டு, சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்று சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து வா.சா.ஆ.1ன் அடிப்படையில் நான் வட்டியாகவோ, பங்கு ஆதாயமாகவோ, ஒரு பைசா கூட வாங்கவில்லை என்றும், ஆனால் 2017 முடிய பங்கு ஆதாயமாக சில தொகைகள் கொடுத்துள்ளார் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. 2017 முடிய வாங்கியதாக சொல்லியிருக்கும் பங்கு ஆதாய தொகையின் மதிப்பு எவ்வளவு என்று நான் ஏன் வழக்கில் சொல்லவில்லை என்றால் அதுவரை அவர் சரியாக பணம் கொடுத்து வந்தார், அதனால் சொல்லவில்லை. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு 2 தாள்களை கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் முன்பக்க தாள்களில் மட்டும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. பின்புறதாளானது வெற்றுதாளாக உள்ளது என்றால் சரிதான். இரண்டு தாள்களில் அடித்தல், திருத்தல் இருக்கா என்றால் 2வது பக்கத்தில் இறுதியில் Yours faithfully என்பது அடிக்கப்பட்டு, அதன் மேல் என் வழக்கறிஞர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். முதல் தாளில் எந்த அடித்தலும் இல்லை. வா.சா.ஆ.4 அறிவிப்பு ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றோ, அல்லது பிரதிவாதி என்னிடம் பணம் பெற்று கொண்டார் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதலீட்டு தொகையில் வருடத்திற்கு 24 % வட்டி என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பங்கு ஆதாயம் என்று வாசகம் இடம்பெற்றுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வட்டி என்று குறிப்பிடாமல் பங்கு ஆதாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வட்டி என்று தான் எழுதியுள்ளது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Dividend என்பதை வட்டியாக கொடுப்பதாக அவர் குறிப்பிட்டார். அதை தான் சொல்லியிருக்கிறேன். Dividend என்பதை வட்டியாக கொடுத்தாக என்பதை நிருபிக்க ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. கடன் என்பதற்கு தான் வட்டி வசூலிப்பது வழக்கம் என்றால் சரிதான். தொழிலில் முதலீடு செய்தாலோ, அல்லது சந்தையில் முதலீடு செய்தாலோ அதற்கு Dividend என்று தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கடனும் கொடுக்கவில்லை, முதலும் செய்யவில்லை என்றால் சரியல்ல, முதலீடு செய்திருக்கிறேன். வா.சா.ஆ.2 காசோலையை பணமாக்கப்படுவதற்கு வங்கியில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதி சொல்லும் போது வங்கியில் காசோலையை பணமாக்க போடுமாறு சொன்னார். பிரதிவாதி அவ்வாறு சொன்னதாக நான் வழக்கில் எங்கேயும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நிறைவேற்றப்படாத வா.சா.ஆ.1 ஆவணமான முதலீட்டு ஒப்பந்த பத்திரத்தையும், பின்னர் பெற்று கொண்ட வா.சா.ஆ.2 காசோலையையும், பிரதிவரிதி கேட்கும் போது திருப்பி கொடுக்காமல் காலம் கடத்தி வந்து தற்போது பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மறுபயன் இல்லாத மேற்படி 2 ஆவணங்களை கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 21.07.2023ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு மத்தியஸ்தம் செய்யப்படவேண்டும் என்பதற்கு மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால்

வழக்கு தாக்கல் செய்த பிறகு அது திருப்பப்பட்டது, அதற்கு பிறகு மனு தாக்கல் செய்து சமரச மையத்திற்கு அனுப்பப்பட்டது. பொய்யான விபரங்கள் கொண்டுபொய் வழக்கு புனையப்பட்டுள்ளதால் நான் சட்டப்படி தண்டனைக்குரிய நபர் ஆவேன் என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு பிரதிவாதியுடன் கூட்டாக சேர்ந்து 1 லட்சம் முதலீடு செய்து தொழில் செய்து வந்தேனா என்றால் இல்லை. அவ்வாறு கூட்டாக செயல்பட்டதன் அடிப்படையில் வாடிக்கையாளர்களிடம் இருந்து பணத்தை வசூல் செய்து நானும் எனது மனைவியும் ரசீது கொடுத்து பணத்தை நாங்களே வைத்து கொண்டோம் என்றால் என்னுடைய மனைவி இந்திராவும், பிரதிவாதி மனைவி அருள்மொழியும் கூட்டாக சேர்ந்து தொழில் செய்தார்கள். அந்த தொழிலுக்கும், இந்த தொழிலுக்கும் சம்பந்தமில்லை. மேற்படி பணம் வசூல் செய்தது உண்மை தான் ஆனால் கணக்கு வழக்கு முடிக்கப்படவில்லை தற்போது வரை நிலுவையில் உள்ளது. நானும், என் மனைவியும் கையெழுத்து போட்ட ரசீது புத்தகம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கணக்கு வழக்கு தற்போது வரை பார்த்து கணக்கு முடிக்கவில்லை. சாட்சியிடம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த 2 ரசீது புத்தகங்கள் நகல்கள் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு சரிதன் என்றும் ஆனால் கணக்கு முடிக்கப்படவில்லை என்று குறிப்பிடுகிறார். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் அது பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ரசீது புத்தகம் தவிர 5-6 ரசீது புத்தகங்கள் பிரதிவாதியிடம் ஒப்படைத்துள்ளோம். மேற்படி ரசீது புத்தகத்தின் அடிப்படையில் நானும் எனது மனைவியும் ரூ.3,30,354/- வசூலித்துள்ளோம் என்றால் இருக்கலாம் ஆனால் கணக்கு பார்க்கவில்லை. மேற்படி காலகட்டத்தில் பிணையமாக கொடுக்கப்பட்ட காசோலை தான் இந்த வழக்கில் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றர் சரியல்ல. வா.சா.ஆ.1ன்படி எந்த பணமும்

பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் திருப்பி கொடுக்காமல் வைத்திருந்த வா.சா.ஆ.1 மற்றும் 2 ஐ பயன்படுத்தி பிரதிவாதியிடம் இருந்து ஏமாற்றி பணம் பறிக்க இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.06.19 18:06:27 +0530

Sub Judge

Melur